முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம் : 1179

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**21.12.2022,** புதன்கிழமை

1. பிரம்ம ரகசிய மகா சூட்சுமம்
   பிரணவம் ஓதி இனிதே கண்டநல்
   சரவணச் சுடரின் மகா சக்தியாக
   சற்குருவாய் கலியில் அவதரித்த அரங்கனே
2. அரங்கனே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
   அருளுவேன் ஞான அறிவுரை ஆசி
   (சுபகிருது வருடம் மார்கழி மாதம் **06** ம் நாள் **21.12.2022,** புதன்கிழமை)
   வரமென நின் அவதாரத்தால்
   வையகத்தில் அற்புதங்கள் நிகழக்கூடும்
3. கூடுமப்பா ஞானிகள் ஆட்சியாக
   குரு அரங்கன் நீ விரும்பும்வண்ணம்
   நாடெங்கும் ஞானவான்கள் இனிதே பெருகி
   ஞான ஆட்சி கலியினில் நடந்தே தீரும்
4. நடந்தேறும் அரங்கன் உன் கொள்கையாலே
   நடந்தேறும் அரங்கன் உன் தொண்டர்களாலே
   தடையின்றி சடுதி இந்த உலகமாற்றம்
   தமிழகம் தொட்டு தரணி எங்கும் இனிதே பரவும்
5. பரவுகின்ற பரமானந்த கதியாய்நீ
   பாமரர்க்கும் எளிய ஞானம் இனிதே வழங்கி
   நடைபோடும் அரங்கன் குருஅருள் பலத்தால்
   ஞானபண்டிதன் யானும் திருவருளை இறக்கி
6. இறக்கியே அன்பர்கட்கு இனிதே ஞானம்
   இணையில்லா அழியாமை எனும் சக்தியாக
   துணைபட வழங்கி உன் தொண்டர்களெனும்
   தூய அடையாளத்தில் இந்த பேருலகை மாற்றும்
7. மாற்றம் தரவந்த ஞானி அரங்கன் நீ
   மக்களைத் தேற்றும் உயர்ஞானி கலியில் நீ
   ஆற்றல்பட உன் சக்திக்குள்ளே
   ஆறுமுகன் அளவிலா இணைந்து இந்த அற்புதம் நடத்துகின்றேன்

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–